## தேவனுடைய இரட்சிப்பின் சாதாரண திட்டம்

1. ஒவ்வொரு நபரும் இரட்சிக்கப்பட வேண்டும்:
''எல்லாரும் பாவஞ்செய்து, தேவ மகிமையற்றவர்களாகி''. (ரோமர் 3:23)

2. யாராலும் தங்களைத்தாமே இரட்சித்துக்கொள்ள முடியாது:
வேதாகமம் கூறுகிறது: ''நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல், தமது இரக்கத்தின்படியே, நம்மை இரட்சித்தார்.'' (தீத்து 3:5)

3. எமக்கு ஒரு மாற்றீடு தேவை:
(எமக்காக ஒருவர் பாவத்திற்கான விலையைச் செலுத்தவேண்டும்) வேதாகமம் கூறுகிறது:
''அவர் அனுப்பினவரை நீங்கள் விசுவாசிப்பதே தேவனுக்கேற்ற கிரியையாயிருக்கிறது என்றார்.'' (யோவான் 6:29)
''தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்.'' (யோவான் 3:16)

4. இயேசுவே இரட்சிப்பின் ஒரே வழியாக இருக்கிறார்:
''அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை.'' (அப்போஸ்தலர் 4:12)

5. பாவத்திலிருந்து மனந்திரும்பி, அழையுங்கள்:
உங்கள் இருதயத்தில், உங்களை இரட்சிக்கும்படிக்கு கர்த்தரிடத்தில் கேளுங்கள்.
''ஆதலால் கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிற எவனும் இரட்சிக்கப்படுவான்.'' (ரோமர் 10:13)
''தேவனே! பாவியாகிய என்மேல் கிருபையாயிரும்.'' (லூக்கா 18:13)

6. உங்கள் இரட்சிப்பைக்குறித்த நிச்சயத்தை எவ்வாறு உடையவராயிருப்பது:
தேவனுடைய வார்தையை வாசியுங்கள்.
விசுவாசியின் பப்டிஸத்தினால் கர்த்தரைப் பின்பற்றுங்கள்.
''வேதாகமத்தை விசுவாசிக்கின்ற'' ''கிறிஸ்துவைக் கனப்படுத்துகிற'' ஒரு சபைக்கு தொடர்ச்சியாகவும் உண்மைத்துவமாகவும் சமூகமளியுங்கள். (எபிரெயர் 10:25)